INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**ஊடக அறிக்கை: ஐ நாவின் அமைதிகாக்கும் பணியில் இருந்து இலங்கை இடைநிறுத்தம்.**

**27 செப்டெம்பர் 2019**

**ஜோகானஸ்பேர்க்:** அமைதிகாக்கும் படையினராக இலங்கை இராணுவத்தினர் வெளிநாடுகளுக்கு செல்வது இடைநிறுத்தப்பட்டிருப்பது பற்றிய ஐ நாவின் அறிவிப்பு வந்திருப்பது நாட்டிற்கு ஒரு சோகமான நாள் ஆகும். இது அமைதிகாக்கும் பணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் குற்றஞ்சாட்டப்பட்ட போர்க் குற்றவாளியான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத்தளபதியாக நியமிப்பதன் மூலம் தேர்தலுக்கான ஆதரவை பெற்றுக் கொள்ளும் இலங்கையின் ஜனாதிபதியின் நகர்விற்கு கிடைத்த பதிலடி இதுவாகும்.

சவேந்திர சில்வா 2008-9 இல் இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவினை வழிநடத்தினார். பொதுமக்களுக்கு எதிரான கண்மூடித்தனமான மற்றும் வேண்டுமென்று நடாத்தப்பட்ட தாக்குதல்கள், வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் மீதான தாக்குதல்கள், பாதுகாப்பு வலையங்கள் மீதான தாக்குதல்கள மற்றும் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களின் பாவனை போன்றவற்றில் அவரது படைகள் சம்பந்தப்பட்டிருந்தன என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன. இது பொதுமக்களுக்கு இழப்புக்கள் மற்றும் காயங்கள் என பேரழிவை ஏற்படுத்தியது. போர் முடிவடைந்து பத்து ஆண்டுகள் கடந்திருப்பினும் இலங்கையானது நிலைமாற்று நீதி திட்டத்திற்கு தனது ஈடுபாட்டைக் காட்டியிருப்பினும் இலங்கையின் அரசியல்வாதிகள் வெட்கப்படும் வகையில் சில்வாவினை ஒரு ''போர் வீரன்'' என அழைக்கின்றார்கள். இதன் விளைவான சிவில் போருக்குப் பின்னர் இணைந்து கொண்ட இளம் இராணுவ வீரர்கள் தற்போது அமைதிகாக்கும் பணியில் இருந்து இடைநிறுத்தப்படுகின்றார்கள்.

*''சவேந்திர சில்வாவின் நியமனமானது நாட்டிற்கு தாங்ளே ஏற்படுத்திக் கொண்ட ஒரு துன்பியல் பாதிப்பாக இருந்தது. கடந்த கால குற்றங்களுக்கு உண்மையான குற்றவியல் பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மை மற்றும் நீதியைப் பெற்றுக் கொடுக்கவும், தற்போதும் இடம்பெற்றுவரும் சித்திரவதைகளை இல்லாமற்செய்வதற்கு பாதுகாப்பு சேவையில் மறுசீரமைப்பை ஏற்படுத்தவும் இலங்கையானது சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதைக் காண விருப்புகின்றோம்.''* என ITJP இன் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ITJP ஆனது இலங்கையில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் பற்றிய அண்மைக்கால சம்பவங்களை ஆவணப்படுத்தி வருகின்றது –

கடந்தவருடம் உட்பட 2015 ஆம் ஆண்டிலிருந்து 79 இது போன்ற சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

பல வருடங்களாக, ITJP இன் அதிகாரிகள் பாதுகாப்பு மற்றும் பொது அதிகாரிகளை ஆய்வுக்குட்படுத்தி வடிகட்டல் தொடர்பில் பணியாற்றி வருகிறார்கள். இதற்காக தனித்தனியான அணிகள் பற்றியும் இறுதிப் போரின் போது அவை நின்ற இடங்கள் பற்றியும் நுட்பமானமுறையில் ஆராய்ச்சி செய்து அந்த அணிகள் பற்றிய தகவல்களை கட்டியெழுப்பியதுடன் இதில் இருந்த தனிப்பட்ட நபர்கள் பற்றிய ஆவணக் கோவைகளையும் உருவாக்கியுள்ளனர். இந்த ஆய்வு நூற்றுக்கணக்கான உயிர்தப்பியவர்கள் மற்றும் நேரடிச் சாட்சிகளிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களுடன் இராணுவத்தால் இணையத்தில் இருந்து அழிக்கப்பட்ட ஆனால் எங்களால் மீட்டெடுக்கப்பட்ட இராணுவத்தின் நிலைமை அறிக்கைகள் உட்பட வெளி மூல ஆய்வையும் ஒன்று சேர்த்து போர் நடத்தப்பட்டது பற்றிய விரிவான தகவல்களைக் கொண்டுள்ளது. இந்த முயற்சியின் போது இது போன்ற ஒரு நபரை ஐக்கிய நாடுகள் பணியில் ஈடுபடுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு உயர்வான ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதை வாதிடக்கூடியதாக சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் இடம்பெற்றன என்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்ற ஒரு இடத்தில் இருந்த படையணிகளை அடையாளங்காண்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

*''தமது படைகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என விரும்பிய பல சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் கவனமான முறையில் இந்த ஆய்வுக்கு உதவியதுடன் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடாத போதும் நாங்கள் அவர்களுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளோம்''* என ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். *"ஏற்கனவே இவ்வாறான ஐ.நா இன் செயற்பாடு பற்றிய செய்தி இன்னும் எந்த நீதியுமே கிடைக்காத போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது.''*

இந்த இடைநிறுத்தம் பற்றி தெரியவருவது என்னவெனில் தற்போது பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை அமைதிகாக்கும் படைப் பிரிவுகள் தமது சுற்றுப்பயணம் முடியும் வரை அதே இடத்தில் இருக்கும் பின்னர் அவர்களுக்கான இடத்திற்கு வேறு ஒரு நாட்டில் இருந்து படையினர் கொண்டு வரப்படுவார்கள். ஆயினும் அமைதிகாப்பு நடவடிக்கைகளுக்கான ஐநாவின் திணைக்களம் ஐநாவின் நடவடிக்கைகள் கடுமையாக ஆபத்திற்குள்ளாகும் பட்சத்தில் இந்த இடைநிறுத்தம் இரத்துச் செய்யப்படலாம் என்ற ஒரு நிபந்தனையும் சேர்த்திருப்பது போல் தெரிகின்றது.

*''இது எதனைக் கருதுகின்றது என்பது பற்றி ஐக்கிய நாடுகளிடமிருந்து மேலும் தெளிவுபடுத்தலை நாங்கள் எதிர்பார்துள்ளோம், இந்த முக்கியமான மனித உரிமைகள் விடயத்தில் ஐ.நா ஏமாற்ற முயற்சித்தால் அது அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான திணைக்களத்தின் நற்பெயரை பெரிதும் பாதிப்பதாக இருக்கும். 'பூச்சிய சகிப்புதன்மைக் கொள்கை' பற்றி நீங்கள் கதைத்தால் அது பூச்சியமாக இருக்க வேண்டும் அத்துடன் அது உறுதியான முறையில் செய்யப்பட வேண்டும்'' என சூக்கா தெரிவித்துள்ளார்.*

**பொருத்தமான ITJP வெளியீடுகள்:**

- செப்டெம்பர் 2017 இல் ITJP , சவேந்திர சில்வாவினால்[1] நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுக்கு ஒன்றுபட்ட அனுசரணை வழங்கியமை பற்றி கேள்வி எழுப்பி இரண்டு வர்த்தக நிறுவனங்களுக்கு கடிதம் எழுதியது.
- நவம்பர் 2017 இல் ITJP மற்றும் இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கான ஜனநாயகம் (JDS Lanka)என்ற அமைப்புடன் இணைந்து 2004 -7[2] வரையான காலப் பகுதியில் கெயிட்டியில் இருந்த இலங்கை அமைதிகாக்கும் படையினால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பில் போதிய குற்றவியல் பொறுப்புக்கூறல் இல்லை என்பது பற்றி கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.
- பெப்ரவரி 2018 இல் இலங்கையில் இறுதிப் போரின் போது முன்னரங்க போரில் நின்ற ஒரு அதிகாரி தலைமையில் லெபனானில் பணிக்கமர்த்தப்பட்ட இராணுவ அணி பற்றிக் கேள்வி எழுப்பியதுடன் அவருக்கு முன்னர் இருந்த மூன்று அதிகாரிகளும் வடிகட்டலுக்கு உட்படவில்லை என்பது பற்றிய கரிசனையையும் எழுப்பியது.

- ஏப்பிரல் 2018 இல் ஐநாவின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளில்[3] பணிபுரிவதில் இருந்து தடைசெய்யபட வேண்டும் என விசேட அதிரடிப் படையினைச் சேர்ந்த இலங்கை இராணுவத்துணை பொலிசாரின் 50 இற்கும் மேற்பட்ட பெயர்களைக் கொண்ட இரகசியப் பட்டியல் ஒன்றினை ITJP ஐநாவுடன் பகிர்ந்து கொண்டது.
- 2018 இன் பிற்பகுதியில் அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான வடிகட்டலில் ஏற்பட்ட தோல்விகள் பற்றிய இரகசிய ஆவணக் கோவையை அமைதிகாக்கும் நடவடிக்கைக்கான ஐக்கிய நாடுகளின் திணைக்களத்திற்கு[4] சமர்ப்பித்தது. இந்த தோல்விகள் கிழக்கு தீமோர், டாபூர் , தென் சூடான், லெபனான், மாலி மற்றும் கெயிட்டி போன்ற இடங்களில் இலங்கையைச் சேர்ந்த தனிநபர்கள் பணியல் ஈடுபடுத்தப்பட்டமையை உள்ளடக்கின்றது.
- யூலை 2018 இல் கெயிட்டியில்[5] இடம்பெற்ற அமைதிகாக்கும் பணி மீறல்களுக்காக பொறுப்புக்கூறல் தொடர்பில் நாட்டுக்குள்ளேயே ஒரு தகவல் வேண்டுகைக்கான உரிமைக்கு முழுமையாகவும் ஒத்திசைவாகவும் பதிலளிக்குமாறு ITJP இலங்கை இராணுவத்திற்கு அழைப்பு விடுத்தது.
- ஒக்டோபர் 2018 இல் , ITJP இனால் வெளித்தகவல் மூலம் ஐநாவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் காரணத்தின் ஒரு பகுதியாக சவேந்திர சில்வாவின் 58ஆவது படைப்பிரிவில் பணியாற்றி மாலியின் படையணிக்கு பொறுப்பாக இருந்த அதிகாரி நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்[6].
- ஜனவரி 2019 இல் ITJP சவேந்திர சில்வா பற்றி இன்றுவரரை மிகவும் விரிவான ஒரு ஆவணக்கோவையை வெளியிட்டது. அந்த ஆவணம் இராணுவத்தின் புதிய தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவினை பணியில் இருந்து இடைநிறுத்தவும் அவரை போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு[7] எதிரான குற்றங்கள் தொடர்பில் குற்றஞ்சுமத்துவதற்கு போதியளவு ஆதாரங்கள் இருப்பதாக அது தெரிவித்தது.
- ஆகஸ்ட் 2019 இல் ITJP சவேந்திர சில்வாவை இராணுவத்தளபதியாக பதவியுயர்வு வழங்கும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் சர்வதேச சமூகத்திடமிருந்து[8] கொள்கை ரீதியான ஒரு பதிலுக்கும் அழைப்பு விடுத்தது.

---

[1] http://www.itjpsl.com/assets/press/Letter-CEAT-Specialty-Tyres-Setember-2017.pdf
http://www.itjpsl.com/assets/press/Herbert-Alan-Coca-Cola-Sept-2017.pdf
[2] A Joint Report with Journalists for Democracy in Sri Lanka: LACK OF ACCOUNTABILITY FOR CHILD SEXUAL EXPLOITATION BY SRI LANKAN PEACEKEEPERS, 13 Nov 2017, http://www.itjpsl.com/assets/press/haiti-FINAL.pdf
[3] Press release: ITJP sends UN list of alleged perpetrators for vetting, 23 Apr 2018,
http://www.itjpsl.com/assets/press/final-STF-press-release.pdf
[4] https://www.theguardian.com/world/2018/jul/21/sri-lanka-war-criminals-un-peacekeeping-missions-darfur-mali-south-sudan
[5] Press Statement: Haiti: More than a decade and still hiding, 17 July 2018
http://www.itjpsl.com/assets/press/Press-Statement-haiti-f.pdf
[6] http://www.itjpsl.com/assets/press/UN-repatriates-Sri-Lankan-peacekeeper-for-his-role-in-2009-war.pdf Press Release: UN repatriates Sri Lankan peacekeeper for his role in 2009 war, 20 Oct 2018.
[7] http://www.itjpsl.com/assets/press/29-Jan-2019-Shavendra-Silva-press-release.pdf
[8] Press Release: Sri Lanka betrays its people by promoting alleged war criminal to head its army, 19 August 2019, http://www.itjpsl.com/assets/press/SS-Press-Release-final-2.pdf .

முற்றும்.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT